
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
சங்கம்
CLUB

Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

20.12.2019

## சண்முகா கல்லூரியில் உலக எய்ட்ஸ் தினம் 2019
## விழிப்புணர்வு கருத்தரங்கம்

சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செஞ்சுருள் சங்கம் (RRC) சார்பாக உலக எய்ட்ஸ் தினம் 2019 முன்னிட்டு ஒரு நாள் எச்ஐவி - எய்ட்ஸ், இரத்ததானம் மற்றும் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் செயலர் மற்றும் தாளாளர் திரு.**என்.குமார்** துவக்கவுரையாற்றினார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் தலைவர் திரு.**எம்.என்.பழனி,** பொருளாளர் திரு.**கோ.இராஜேந்திரகுமார்** ஆகியோரின் வாழ்த்துதலோடு நடைபெற்ற இந்நிகழ்வில் கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்** வாழ்த்துரை வழங்கினர். இக்கருத்தரங்கில் **உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு உறுதிமொழி** ஏற்கப்பட்டது. உயிர்தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் பேராசிரியர் **எம்.கோபு** அவர்கள் டெங்கு காய்ச்சல் பற்றியும், உயிர்வேதியியல் துறைத்தலைவர் பேராசிரியை **எம்.சுதா** அவர்கள் இரத்ததானம் பற்றியும், நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் முனைவர் **கே.சத்தியசீலன்** அவர்கள் எச்.ஐ.வி-எய்ட்ஸ் பற்றியும் மாணவர்களிடையே விரிவாக எடுத்துரைத்தனர்.

இக்கருத்தரங்கில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியின் முடிவில், செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் **எ.ஜெயக்குமார்** நன்றியுரையாற்றினார்.

தாளாளர்